# வடபழனி மெட்ரோ ரயில் நிலையத்தில் புகைப்படக் கண்காட்சி

சென்னை, ஆக. 20: வடபழனி மெட்ரோ ரயில் நிலையத்தில் வரும் 23-ஆம் தேதி முதல் 29-ஆம் தேதி வரை புகைப்படக் கண் காட்சி நடைபெறுகிறது.

உலக புகைப்பட தினத்தை ஒட்டி, சென்னை மெட்ரோ ரயில் நிறுவனமும், சென்னை புகைப்பட அமைப்பும் இணைந்து இக் கண்காட்சியை நடத்துகின்றன.நாள்தோறும் காலை 10 முதல் இரவு 8 மணி வரை பார்வையிடலாம். அனுமதி இலவசம்.

இதுகுறித்து மெட்ரோ ரயில் நிர்வாக அதிகாரி ஒருவர் கூறி யது: மெட்ரோ ரயில் நிலையத்தில் செய்யப்பட்டுள்ள அடிப் படை வசதிகள், பணிமனையில் நடைபெறும் பராமரிப்புப் பணி கள், சென்னை மாநகரில் மெட்ரோ ரயில் இயக்கப்படுவது உள் ளிட்டவை கண்காட்சியில் காட்சிப்படுத்தப்படும். இதற்காக சென்னை புகைப்பட அமைப்பை சேர்ந்த 38 பேர் கொண்ட குழுவினர் பல்வேறு மெட்ரோ ரயில் நிலையங்களில் சென்று 100 புகைப்படங்களை எடுத்துள்ளனர். மேலும், 'ஷூட் மெட் ராஸ்' என்ற தலைப்பில் புகைப்படப் போட்டியும் அறிவிக்கப்பட் டுள்ளது. சென்னையின் அழகு, சென்னை கட்டடக் கலை, இர வில் சென்னையின் அழகு ஆகிய 3 தலைப்புகளில் புகைப்படப் போட்டியும் நடத்தப்படுகிறது. இதில் வெற்றி பெறுபவர்களின் புகைப்படங்கள் கண்காட்சியில் இடம்பெறும்.